முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி கார்த்திகை மாதம் 9ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 16ம் திகதி வரை**

**நவம்பர் 25ம் திகதி முதல் டிசம்பர் 2ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அமுத மொழியாம் தமிழ் மொழி
ஆளுமை கொண்ட தமிழகமே
நேமமுடன் சத்திய கீர்த்திகளை
நீதிமான்களை வரலாறாகக் கொண்ட

2. கொண்டநல் பலமிக்க பாரதமே
குறையிலா இந்தியா தமிழகத்தில்
உண்மையான விளம்பி தேள் திங்களில்
உயர்வான நவதிகதி மேல் மூவையோர் திகதி வரை
(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிறு முடிய)

3. வரையான இந்த வார நிகழ்வை
வருங்கால பலனாக சுப்பிரமணியர் யானும்
வார ஆசியாக விளம்பிடுவேன்
வல்லமைபட தமிழகம் எங்கும்

4. எங்கும் மக்களிடை விழிப்பும்
எவற்றையும் ஆராயும் பக்குவம்
தேங்கா சேவை நோக்கும் வளரும்
துறைவழி அரசு பணியிடங்கள்

5. பணியிடங்கள் நிரப்பா முடங்கினாலும்
பாடிடுவேன் பணிகள் பூர்த்தியும்
பணியாளர்களிடை மாற்றமும் ஏற்படும்
பதவி மேல் பயபக்தி இல்லா அநீதி வழி

6. அநீதி வழி நடக்கும் அதிகார
அனைத்து வர்க்கங்களும் இனி
கனிவுபட நடக்காது இருந்தால்
கட்டாயம் தண்டனை பணி தடை

7. தடை நேர பீடை சோடைகள்
தானவர்கள் நிலை கெட நேரும்
சோடை போகா வளர்ச்சிக்கு
சுருதிபடி உலகோர் தருமவழி ஏற்று

8. ஏற்று இறை நம்பகம் கொண்டு
எல்லாம்வல்ல ஞானியாக வந்த
தேற்றம் தரும் ஆறுமுக ஞானியை
தேடிக் கண்டடைந்து சரணடைய

9. சரணடைந்து சமத்துவ சமதர்ம
சத்தியநெறி அகலா வாழ
திறம்பட தமிழகம் எல்லா வகையும்
தேற்றம் கண்டு தலைநிமிரும்

10. தலைநிமிரும் ஞானபூமியாக
தலைமை மாறும் ஞான ஆட்சியாக
தலைநிமிர தமிழகம் தொட்டு
தாயகம் பாரதமும் தனி வளம் பெறும்

11. வளமான நிலைகள் கூட
வரலாறு படைக்க எல்லா வகையும்
பலம்பெற வேண்டுமாயின் இனி
பாடிடுவேன் மத்தியும் தாமதிக்கா

12. தாமதிக்கா தமிழக வளர்ச்சிக்கு
தனித்துவம் தந்து துணைவர
நேமமுடன் உலக சந்தையில்
நிதிநிலை தொழில் கழனி வளர்ச்சியில்

13. வளர்ச்சியில் பரதம் தன்னிறைவும்
வளர்ச்சி நாடுகளின் பட்டியலில்
வளர்ந்துமே முதன்மைக்கு வரும்
வழங்கிய வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார கால நிகழ்வுகள்**

அமுதத்திற்கு நிகரான இனிமையான மொழியாகிய தமிழ்மொழியை ஆட்சி மொழியாக கொண்ட தமிழகமே அன்பும் பண்பும் சத்தியமும் புகழும்மிக்க நீதிமான்களை உடைய நெடிய சிறப்புமிக்க வரலாற்றினை கொண்டிட்ட தர்மபலம் மிக்க பாரத தேசமே குறைவற்ற இந்தியாவிலும், தமிழகத்திலும் விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தினில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தமிழகம் முழுவதும் மக்களின் சக்தி பெருகி மக்களிடையே விழிப்புணர்வு உண்டாகும், எவற்றையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்கும் பக்குவம் அதிகமாகும். மக்களிடையே சேவை நோக்கங்கள் அதிகமாகும்.

அரசின் துறை சார்ந்த வகையில் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் அரசினில் பணியாளர் குறைபாடுகள் உண்டாகியுள்ள போதிலும் பணிகள் பூர்த்தியாகும். பணிபுரிவோரிடம் நல்ல மாற்றங்கள் உருவாகி சேவை நோக்குடன் செயல்படுவார்கள்.

அரசு பதவிகளில் உள்ளோர் தாங்கள் வகிக்கும் பதவிகளின் மேல் பயபக்தி இல்லாமல் அநீதியான வழியில் நடக்கின்ற அதிகார வர்க்கத்தினரும் மற்றைய பணி செய்வோரும் இனியேனும் கனிவுடன் நடந்து கொள்ளுங்கள். இல்லையெனில் மேலதிகாரிகளால் தண்டிக்கப்படுவீர்கள். மேலும் உங்களது பணிகளில் தடை உண்டாகும். தடைகள் உண்டாவதோடு அல்லாமல் பிணிகளும், உடல்குறைபாடுகளும் உண்டாகி அவர்களது நிலைகள் கெட்டிட நேரிடும்.

ஆதலினால் வீண் போகாத வளர்ச்சிக்கு உலக மக்கள் தருமத்தின் வழிதனை ஏற்றுக் கொண்டு இறைவன் மீது நம்பகம் கொண்டு உலகினில் எல்லாம்வல்ல ஞானியாக வந்துதித்திட்ட ஞானியும், மக்களை கடைத்தேற்றும் வல்லமைகளை தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனை மனம் விரும்பி சென்று பணிந்து வணங்கி சரணடைந்திட வேண்டும். அரங்கன் கூறும் சமத்துவ சமதர்ம சத்தியநெறி அகலாது வாழ்ந்து வர, தமிழகம் எல்லா வகையிலும் கடைத்தேறி தலைநிமிரும். தமிழகம் ஞானபூமியாக மாறி மக்களை வழிநடத்தும் தலைமை மாறும். மாறியே ஞான ஆட்சியாக உருவாகிடும். தமிழகம் தலைநிமர்ந்திட தமிழகத்திலிருந்து அற்புதமான இந்த மாற்றங்கள் தொடங்கி தாயகமாக பாரததேசமும் தனிவளம் பெறும்.

தமிழகத்திலும், தாயகம் பாரத தேசத்திலும் வளமான நிலைகள் அதிகமாகி பாரததேசம் உலகினில் வரலாறு படைத்திட வேண்டுமாயின் இனி மத்தியில் ஆளும் அரசும் தாமதிக்காமல் ஞானபூமியாம் தமிழகத்தின் வளர்ச்சிக்கு தனித்துவம் தந்து துணையாக இருந்திட்டால் உறுதியுடன் சுலபமாக உலக சந்தையில் நிதிநிலை பெருக்கமும், தொழில் வளர்ச்சியும், விவசாய துறையில் பெரும் வளர்ச்சியும் கண்டு பாரததேசம் தன்னிறைவு காணும். வளர்ச்சி நாடுகளின் பட்டியலில் வளர்ந்து முதன்மைக்கு வந்துவிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–